# 7. குடித்தொகை, தொழிற்படை மற்றும் தொழில் நிலை

## குடித்தொகை

1990–1997 காலப்பகுதியில் குடித்தொகை 1.2 சத வீத ஆண்டுச் சராசரியில் வளர்ச்சியடைந்துள்ளது. இது 1981–89 காலப்பகுதியின் 1.5 சத வீத வளர்ச்சி வீதத்திலிருந்தான வீழ்ச்சியொன்றாகும். பதிவாளர் நாயகத் திணைக்களத்தின்படி 1997 இன் நடுவாண்டுக் குடித்தொகை 18.6 மில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளதுடன், குடித்தொகையின் இயற்கை அதிகரிப்பின் காரணமாக முன்னைய ஆண்டைவிட 1.3 சதவீத அதிகரிப்பினையும் கொண்டிருந்தது. இவ்வாண்டில் குடித்தொகையின் 237,000ஆட்களின் அதிகரிப்பானது குடித்தொகை அடர்த்தியை சதுர கிலோமீற்றர் ஒன்றுக்கு 1996 இன் 292 ஆட்களிலிருந்து 1997இல் 296 ஆட்களுக்கு அதிகரிக்கச் செய்தது. 1990களில் குடித்தொகை வளர்ச்சி கணிசமாக மெதுவடைந்த போதிலும் குடித்தொகை வளர்ச்சியானது அதி உயர் தொழில்வாய்ப்பின்மை, அதி உயர் குடித்தொகை அடர்த்தி, காணிகள் துண்டாடப்படல் போன்ற பாரிய பிரச்சினைகளை உருவாக்கியுள்ளது. கிடைக்கத்தக்கதாகவுள்ள நீண்டகால குடித்தொகை எறிவுகள் எதிர்வரும் சில தசாப்தங்களில் மேலெழக் கூடிய குறிப்பிடத்தக்க பல பண்புகளைக் குறித்துக் காட்டுகின்றன. அவையாவன வயதுவந்தோர் குடித்தொகை, அண்டியிருத்தல் விகிதத்தின் அதிகரிப்பு என்பனவாகும். இவற்றுள் வயதுவந்தோர் குடித்தொகையும் அதனோடு தொடர்புடைய சமூகப் பொருளாதார கொள்கை விடயங்களும் உடனடியாகக் கவனம் செலுத்தப்பட வேண்டியவையாகும்.

பிறப்பின் போதான வாழ்வுக்கால எதிர்பார்ப்பின் மேம்பாடுடன் இணைந்து கருவுறல் வீதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியானது, கடந்த சில தசாப்தங்களில் இளம் வயதுக் குழுவினரை விட முதியோர் குழுவின் விரைந்த அதிகரிப்பொன்றுக்கு இட்டுச் சென்றுள்ளது. வயது 65இற்கும் அதற்கு மேற்பட்டதுமான குடித்தொகையின் பங்கு 1946 இலிருந்து அதிகரித்துச் செல்லும் போக்கொன்றினை பிரதிபலித்துள்ளது. இந்த வயதுக் குழுவின் பங்கு 1946இன் 3.5 சதவீதத்திலிருந்து 1997 இல் 4.3 சதவீதத்திற்கு அதிகரித்துள்ளது. மிகப் புதிய எறிவுகளின்படி இவ்விகிதம் 2021 ஆம் ஆண்டளவில் 11.7 சதவீதத்திற்குத் தொடர்ந்து அதிகரிக்கும். இந்த மாற்றமானது குடித்தொகையை அடித்தளம் அகன்ற பிரமீட் அமைப்பிலிருந்து உருளை அமைப்புக்கு மாற்றமடையச் செய்தது. 0–14 வயதுடைய குழந்தைகளின் பங்கு முதியோர் குடித்தொகையின் அதிகரிப்புக்கு எதிராக முழுமையான நியதிகளிலும் சார்புரீதியான நியதிகளிலும் வீழ்ச்சியடைந்து சென்றுள்ளது.

முதியோர் குடித்தொகையின் அண்டியிருக்கும் வீதம் 1946 இன் 5.9 சதவீதத்திலிருந்து 1997 இல் 7.4 சதவீதத்திற்கு கணிசமான அதிகரிப்பொன்றினைப் பிரதிபலித்தது. 1991இல் 25 வயது என மதிப்பிடப்பட்ட இடை வயதுக் குடித்தொகை 2011 ஆம் ஆண்டளவில் 32.5 சதவீதத்திற்கு அதிகரிக்கும் என எறிவு செய்யப்பட்டுள்ளது. இது முதியோர் அண்டியிருக்கும் வீதத்தின் அதிகரிப்பொன்றினை விளைவிக்கும். (1991இன் 8.5 சதவீதத்திலிருந்து 2011 இல் 12.3 சதவீதத்திற்கு) 2021 ஆம் ஆண்டளவில் இது 17.4 சதவீதத்திற்கு அதிகரிக்கும் என எறிவு செய்யப்பட்டுள்ளது. இந்த அதிகரிப்பானது முதியோரின் அடிப்படைத் தேவைகளை எதிர்கொள்ளுவதற்கான பொருளாதார மற்றும் சமூக மூலவளங்களின் மேலதிக அதிகரிப்பினைத் தேவைப்படுத்தும்.

முதிர்ச்சியடையும் குடித் தொகையானது தொழிற்படை கல்வி, சுகாதாரம், மற்றும் சமூக நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்களில் பல்வேறுபட்ட தாக்கங்களைக் கொண்டிருக்கும். தொழிற்படையின் எதிர்கால அதிகரிப்பானது 2010 ஆம் ஆண்டிலிருந்து உறுதியான பூச்சிய வளர்ச்சி நிலையை எய்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது. தொழிற்

**அட்டவணை 7.1**

குடித்தொகையின் அடிப்படைக் குறிகாட்டிகள்

| ஆண்டு | குடித் தொகை ('000) | ஆண்டு வளர்ச்சி வீதம் (%) | செப்பமற்ற பிறப்பு வீதம் ('000 ஆட்கள்) | செப்பமற்ற இறப்பு வீதம் ('000 ஆட்கள்) | பிறப்பில் எதிர்பார்க்கப் படும் ஆயுள் (ஆண்டுகள்) |
|---|---|---|---|---|---|
| 1871 | 2,417 | 0.8 | 28.5 | 20.0 | 40.0 |
| 1946 | 6,657 | 1.5 | 35.4 | 14.3 | 42.2 |
| 1953 | 8,098 | 2.8 | 48.0 | 10.4 | 58.2 |
| 1963 | 10,582 | 2.7 | 34.1 | 8.5 | 61.7 |
| 1971 | 12,690 | 2.2 | 30.4 | 7.7 | 65.5 |
| 1981 | 14,847 | 1.7 | 28.2 | 5.9 | 69.9 |
| 1991 | 17,247 | 1.5 | 21.0 | 5.5 | 72.5 |
| 1995 | 18,112 | 1.4 | 19.3 | 5.8 | வி. கி. |
| 1996 | 18,315 | 1.1 | 18.6 | 6.5 | வி. கி. |
| 1997(அ) | 18,552 | 1.3 | வி. கி. | வி. கி. | வி. கி. |

மூலங்கள் : குடிமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்
பதிவாளர் நாயகத் திணைக்களம்

(அ) தற்காலிகம்.

**அட்டவணை** 7.2

வயதுத் தொகுதி, தங்கியிருத்தல் மற்றும் பால் விகிதத்தின்படி குடித்தொகை அமைப்பு

| ஆண்டு | விரிந்த வயதுத்தொகுதி % பங்கீடு (ஆண்டு) | | | தங்கியிருக்கும் விகிதம் (%) | | | பால் விகிதம் (%) |
|---|---|---|---|---|---|---|---|
| | 0-14 | 15-64 | 65உம் மேல் | சிறார்கள் | முதியோர் | மொத்தம் | |
| 1946 | 37.2 | 59.3 | 3.5 | 62.7 | 5.9 | 68.6 | 113 |
| 1971 | 39.0 | 56.8 | 4.2 | 68.7 | 7.4 | 76.1 | 106 |
| 1981 | 35.2 | 60.5 | 4.3 | 58.2 | 7.1 | 65.3 | 104 |
| 1991 | 31.2 | 63.4 | 5.4 | 49.2 | 8.5 | 57.7 | 103 |
| 1995 | 35.2 | 58.5 | 4.3 | 60.2 | 7.3 | 67.5 | 104 |
| 1997 | 35.2 | 60.5 | 4.3 | 60.0 | 7.4 | 68.0 | 104 |
| 2011 (அ) | 23.3 | 68.3 | 8.4 | 34.1 | 12.3 | 46.4 | 100 |
| 2021(அ) | 21.1 | 67.2 | 11.7 | 31.4 | 17.4 | 48.8 | 99 |

(அ) எறிவுகள்

மூலம்: குடிமதிப்புப் புள்ளிவிபரவியல் திணைக்களம்

**சிறப்புக்குறிப்பு 5**

## இலங்கையில் சமூகப் பாதுகாப்பு முறை - முதிர்ச்சியடையும் குடித்தொகையொன்றின் பிரச்சனை

பொருளாதார ரீதியில் செயல்திறன் அற்றதும் நலிவுற்றதுமான பிரிவினருக்கு சமூகப் பாதுகாப்பினை வழங்குவது சமூகத்தின் பொறுப்பாகும் என உலகளாவிய ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. பொருளாதார ரீதியிலும் சமூக ரீதியிலும் எளிதில் பாதிப்புக்குள்ளாவோரில் தொழில்புரியும் வயதைத்தாண்டிய முதியோர், தமது சொந்த வருமானத்தினால் தமக்கே ஆதரவினை வழங்க முடியாத நிலையிலுள்ள மிக வறிய பிரிவினர், அநாதைகள், ஊனமுற்றோர், ஆகியோர் அடங்குவர். இலங்கையில் தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் இந்தப் பிரிவினருக்கு சமூகப் பாதுகாப்பை வழங்குவதற்கான குறிக் கோளுடன் பொது உதவி, உணவுப் பங்கீட்டு முறை, உணவு முத்திரைகள், சனசக்தி மற்றும் சமுர்த்தி போன்ற பாரிய எண்ணிக்கையினைக் கொண்ட உதவிக் கொடுப்பனவுத் திட்டங்களை யும் வறுமை நிவாரணத் திட்டங்களையும் தொடர்ந்து நடைமுறைப்படுத்தியுள்ளன. இதற்கு மேலதிகமாக தொழில்புரியும் வயதைத்தாண்டிய ஆட்களுக்கு வருமான உதவியை வழங்குவதற் காக வேண்டி ஓய்வூதியத்திட்டங்களும், ஊழியர் சேமநிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் போன்ற ஏனைய திட்டங்களும் காணப்படுகின்றன. மூலவளக் கட்டுப்பாடுகளின் முதன்மைக் காரணத்தினால் கடந்த காலத்தின் அதே அளவில் இந்தச் சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்களை தொடர்ந்து மேற்கொள்ளுவதில் அரசாங்கங்கள் அதிகரித்த இடர்பாடுகளை எதிர்நோக்க வேண்டியுள்ளமையை கண்டுள்ளன. குறிப்பாக இலங்கையில் மிக அண்மிய எதிர்காலத்தில் பயன்தரு நிவாரண முறைகள் பின்பற்றப்படாவிட்டால் முதியோர் தொடர்பான விடயங்கள் நெருக்கடி நிலைமையொன்றினை எய்தக் கூடியதாக இருக்கும்.

முதியோருக்கு சமூகப்பாதுகாப்பினை வழங்கும் பிரச்சினையானது அனைத்து நாடுக ளுக்கும் பொதுவானதாகும். எனினும் குடித்தொகை யின் இந்தப் பிரிவு நீண்டகாலமொன்றாகவே குடித்தொகையில் அதனது பங்கினை அதிகரித்தச் சென்றுள்ளதோடு பொதுவாக பொருளாதார அபிவிருத்தியினால் முந்தப் பெற்றுள்ளது. இலங்கையில் முதிர்ச்சியடையும் குடித்தொகை தனித்தன்மை வாய்ந்ததாகும். விரைந்து அதிகரிக்கும் வாழ்வுக்காலம் மற்றும் வீழ்ச்சியடைந்துவரும் இறப்பு வீதங்கள் என்பன வற்றின் காரணமாக அது எப்பொழுதுமில்லாத விரைந்த குடிப்பரம்பல் மாற்றங்களைக் கொண்டுள்ளதோடு இது அபிவிருத்தியடைந்த நாடுகளின் நிலைமைக்கு ஒத்ததாகும். இலங்கை யில் காணப்படும் வேறுபாடு என்னவெனில் இந்த குடிப்பரம்பல் நிலைமை தாழ்ந்த தலைக் குரிய வருமான மட்டமொன்றில் எய்தப் பெற்றுள்ள

சிறப்புக்குறிப்பு 5 (தொடர்ச்சி)

மையாகும். இலங்கையின் குடித்தொகை ஏனைய அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளைவிட விரைவாக முதிர்ச்சியடையும் என எறிவு செய்யப்பட்டுள்ளது. 60 வயதுக்குக்கூடிய குடித்தொகையின் பங்கு தற்போதைய 8 சதவீதத்திலிருந்து 2010 ஆம் ஆண்டில் 13 சதவீதத்திற்கும் 2025ஆம் ஆண்டில் 21 சதவீதத்திற்கும் அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளதோடு, யப்பான் மற்றும் சிங்கப்பூர், ஆகிய நாடுகளுக்கு அடுத்ததாக இலங்கையினை ஆசியாவில் முதிர்ச்சியடைந்த குடித்தொகையின் அதி உயர் பங்கினைக் கொண்ட மூன்றாவது நாடாகவும் மாற்றிவிடும். இலங்கையின் நடுக்கால வயது தற்போதைய 25 வயதிலிருந்து, 2005 இல் 30 வயதுக்கும் 2025 இல் பெரும்பாலும் 40 வயதுக்கும் 2050 இல் 50 வயதுக்கும் அதிகரிக்கும். மறுவார்த்தைகளில் கூறின் இன்னுமொரு 50 ஆண்டுக்குப்பின் இலங்கையின் குடித்தொகையின் அரைப்பங்குக்கு மேலானவை 50 வயதைத் தாண்டியவர்களாக இருக்கும். விரைந்து செல்லும் வயது முதிர்ச்சியானது தொழிற்படை, கல்வி, சுகாதாரம், மற்றும் சமூகப்பாதுகாப்பு போன்ற பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளையும் பாதிக்கும்.

சுகாதாரப் பக்கத்தில் முதிர்ச்சியடைந்த ஆட்களுக்கு பலதரப்பட்ட நலக்கவனிப்பு முறைகள் தேவைப்படும். மிக முதுமையை அடைந்தவர்கள் நோய்களினால் வாடுவதோடு இளைஞர்களைவிட அதிகமான நலக் கவனிப்பை வேண்டி நிற்பர். நலக் கவனிப்புக்கான அதிகரித்த செலவு பணவீக்கம் காரணமாக ஓய்வூதியம் பெறுவோர் போன்ற வயோதிபர்களின் மட்டுப்படுத்தப்பட்ட வருமானத்தின் கொள்வனவுச் சக்தியின் தேய்மானம் என்பனவற்றின் காரணமாக இந்தப் பிரச்சினை மேலும் மோசமடையலாம். அவர்களால் செலுத்த முடியாது காணப்படுகின்றமையினால் வயோதிபர்களின் அதிகரித்த நலக் கவனிப்புத் தேவைகளை பெருமளவில் தனியார் துறைக்கு மாற்றிவிடமுடியாது. காப்புறுதிச் சந்தைகளும் வயோதிபர்களின் தொடர்ச்சியான நலக் கவனிப்புச் செலவுகளை எதிர் கொள்வதற்கான உள்ளார்ந்த ஆற்றலைக் கொண்டிருக்க மாட்டா. இதன் விளைவாக வயோதிபர்களின் வைத்திய செலவுகள் அரசதுறையின் சுமையொன்றாக மாறக் கூடும்.

தொழிற்படையினைப் பொறுத்தவரையில் அடுத்த நூற்றாண்டின் முதலாவது தசாப்தத்தில் தொழிலாளர் சந்தையில் புதிதாகப் பிரவேசிப்போரின் எண்ணிக்கை வீழ்ச்சியடையும் என எறிவு செய்யப்பட்டுள்ளது. இந்தப் போக்கானது வருவாயை ஈட்டி சேமிக்கும் குடித்தொகையின் பங்கினை வீழ்ச்சியடையச் செய்யும் மொத்தக் குடித்தொகையின் விகிதமொன்றாக பொருளாதாரச் செயல்திறன்மிக்க குடித்தொகை தற்போதைய 65 சதவீதத்திலிருந்து* 2048 இல் 58 சதவீதத்திற்கு வீழ்ச்சியடையும் என ஏனைய மதிப்பீடுகள் வெளிப்படுத்துகின்றன. 60 வயதைத் தாண்டிய குடித்தொகை தற்போதைய 1.6 மில்லியன் அல்லது 8 சதவீதத்திலிருந்து 2048இல் 6.3 மில்லியனுக்கு அல்லது 28 சதவீதத்திற்கு அதிகரிக்கும். அண்டியிருக்கும் விகிதம் இன்றைய 58 சதவீதத்திலிருந்து 2048 இல் 72 சதவீதத்திற்கு அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே தொழிற்படை யானது உறுதிப்பாட்டை நோக்கி விரைந்து நகருகின்றமையினால் எதிர்கால பொருளாதார அபிவிருத்தியானது அதிகரித்த உற்பத்தித்திறனிலிருந்தே பெறப்படல் வேண்டும். உழைப்புச் செறிவுமிக்க நடவடிக்கைகளுக்கான மனிதவலுவில் பற்றாக்குறை ஏற்படுவதன் காரணமாக அதிஉயர் கூட்டிய பெறுமதியுடைய துறைகளுக்கு பொருளாதாரத்தை நகர்த்த வேண்டிய கட்டாயமும் தோன்றும்.

பிறப்பு வீதத்தில் காணப்படும் குறைப்பானது பள்ளிக்கூடம் செல்லும் வயதுடைய குடித்தொகையில் வீழ்ச்சியொன்றினை ஏற்படுத்தியபோதிலும் இது கல்விக்கான செலவுகளைக் குறைப்பதற்கு அரசாங்கத்திற்கு இடமளிக்காது. தொழிலாளர் வழங்கலில் ஏற்படும் வீழ்ச்சியின் காரணமாக தொழிலாளர் உற்பத்தித் திறனில் தேவைப்படும் மேம்பாடுகளை எய்துவதற்காக வேண்டி கல்வியில் தர மேம்பாட்டினைப் பெறுவதற்காக அதிகரித்த செலவுகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

சமூகப் பாதுகாப்புப் பக்கத்தில் அண்டியிருக்கும் வயோதிபர்களை நீண்ட நாட்களுக்குக் கவனிப்பது அதிகரித்த பிரச்சனையொன்றாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இலங்கைச் சமூகமானது மரபு ரீதியாகவே நீடித்த குடும்ப அமைப்பு முறையிலும் வயோதிபர்களைக் கவனிப்பதற்காக தொழில்புரியா பெண்களிலும் தங்கியிருந்துள்ளது. வயோதிபர்களுக்கு நீண்டகாலமாக இலவசப் பணிகளை வழங்கிய பெண்களின் பெரிய பாகமொன்று தொழிலாளர் சந்தையில் பிரவேசிப்பதன் காரணமாக

* குணதிலக கொட்பிறி எதிர்காலத்திற்கான நோக்கு - இலக்குகளும் தோற்றப்பாடுகளும்

சிறப்புக்குறிப்பு 5 (தொடர்ச்சி)

எதிர்காலத்தில் இந்தப் பண்பு தொடரும் என எதிர்பார்க்க முடியாது. மேலும் வயோதிபர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்போது அவர்களைக் கவனிப்பதற்கு பிள்ளைகள் குறைவாகவே காணப்படுவர். அத்துடன் விரைந்த பொருளாதார மாற்றங்களின் காரணமாக பண்பாட்டுப் பெறுமதி முறை தொடரும் எனவும் எதிர்பார்க்க முடியாது.

தற்போதைய ஓய்வூதியத் திட்டங்களும் ஏனைய இறுதி நன்மைத் திட்டங்களான சேம நிதியங்களும் தொழிற்படையின் 45 சதவீதத் திற்கும் குறைவான ஆட்களையே உள்ளடக்குகின்றன. இவற்றில் உள்ளடக்கப்படாத எஞ்சிய 55 சதவீதமானோரும முக்கியமாக கிராமியப் பிரதேசங்களில் வசிப்பவர்களாகக் காணப்படுவதோடு முறைசார்ந்த துறைக்கு வெளியே தொழில் புரிகின்றனர். தற்போது முறைசார்ந்த வயோதிபருக்கான உதவியைப் பெறமுடியாதுள்ள குடித்தொகையின் பெரும் பங்கினரின் ஓய்வூதிய மற்றும் ஏனைய சமூக பாதுகாப்புக்கான கேள்வியினை மறுப்பதற்கு எதிர்காலத்தில் அரசாங்கங்களுக்கு அரசியல் ரீதியில் இயலாது காணப்படும். நிதியிடப்படாத அரசாங்க ஓய்வூதியத் திட்டமானது ஏற்கனவே அரசாங்க வரவு செலவுத் திட்டத்தில் சுமையாகவே உள்ளதோடு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் கிட்டத்தட்ட 2 சதவீதத்திற்கும் வகை கூறுகின்றது. 2030 ஆம் ஆண்டளவில் இது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் கிட்டத்தட்ட 5 சதவீதமாக இருக்கும் என எறிவு செய்யப்பட்டுள்ளது.

அரசாங்கச் சேவையாளர்களுக்கான தற்போதைய ஓய்வூதியத் திட்டத்தின் உள்ளார்ந்த நலிவுகள் வயோதிப குடித்தொகையுடன் இணைந்த பிரச்சனைகளை மேலும் மோசமாக்கலாம். இலங்கையில் வாழ்வுக்கால எதிர்பார்ப்பு முறையே பெண்களுக்கு 55 வருடங்களாகவும் ஆண்களுக்கு 56 வருடங்களாகவும் காணப்பட 1950 களில் ஓய்வுபெறவேண்டிய வயது பெண்களுக்கு 50 வயதாகவும் ஆண்களுக்கு 55 வயதாகவும் தீர்மானிக்கப்பட்டது. தொடர்பான வாழ்வுக்கால எதிர்பார்ப்பு 75 வயதுக்கும் 70 வயதுக்கும் அதிகரித்துள்ளபோதிலும் ஓய்வு பெறும் வயது அதிகரிக்கப்படவில்லை. இதன் விளைவாக இயக்கமற்ற விகிதம் அதாவது வேலை செய்த வருடங்களின் எண்ணிக்கைக் கான ஓய்வுபெற்ற பின்னரான வருடங்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துள்ளதோடு ஓய்வூதிய செலவுப்பட்டியலில் மேலதிக சுமையினையும் ஏற்படுத்தியுள்ளது. உண்மையில் இலங்கையானது இயக்கமற்ற அதி உயர் விகிதமொன்றினைக் கொண்டுள்ள நாடுகளில் ஒன்றாகும். தற்போதைய திட்டமானது ஓய்வூதிய வயதுக்கு முன்னரே தொழிலாளர்களுக்கு அதி உயர் ஓய்வூதிய மட்டத்தினை எய்துவதற்கு அனுமதிக்கின்றது. இதன் மூலம் அவர்கள் இன்னமும் நீண்ட காலப்பகுதிக்கு தொடர்ந்து பணிபுரியக் கூடியதாக இருந்தபோதிலும் ஓய்வு பெறல் ஊக்குவிக்கப்படுகின்றது.

## வயோதிப பிரச்சனையை நாம் எவ்வாறு எதிர் கொள்ளமுடியும்?

தலைக்குரிய வருமானம் இன்னமும் தாழ்வாகவே உள்ள வேளையில் நாட்டின் குடித்தொகை முதிர்ச்சியடையும்போது உழைப்புக்கு உயர்ந்த வருவாய் ஈட்டலை உறுதிப்படுத்தும் வகையில் அதிகரித்த உற்பத்தித் திறனுடன் உயர்ந்த பொருளாதார வளர்ச்சியினை எய்துவதற்காக தேசிய முன்னுரிமைகள் நிறுவப்படவேண்டிய தேவை காணப்படுகின்றது.

பொருளாதார உறுதிப்பாட்டை கொண்டுள்ள நடவடிக்கைகளில் வறிய மற்றும் ஊனமுற்ற ஆட்களில் அதிகரித்த பங்கேற்பானது குறிப்பாக சுயதொழில் முயற்சிகளில் அவர்களின் பங்கேற்பானது வருமானத்தின் சிறந்த பகிர்ந்தளிப்பினை உறுதி செய்வதுடன் ஓய்வூதிய மற்றும் சேமநிதிய திட்டங்களுக்கு வெளியே கிராமிய பிரதேசங்களில் வாழும் பெரும்பாலானோருக்கு பெருமளவிலான சமூகப்பாதுகாப்பினை வழங்கக் கூடியதாக இருக்கும். சுயதொழில் நடவடிக்கைகளின் அனுகூலம் என்னவெனில் பொதுவான ஓய்வுபெறும் வயதினைத் தாண்டிய வயோதிபர்களும் இன்னும் சில ஆண்டுகளுக்கு வருவாய் உருவாக்க நடவடிக்கைகளை தொடர்ந்து மேற் கொள்ளக் கூடியதாக உள்ளமையாகும்.

வயோதிபர்களின் நீண்டகால கவனிப்புக்காக தனியார் துறையின் ஈடுபாடும் தனியார் துறை தொழில் முயற்சிகளினால் நடைமுறைப் படுத்தும் பங்களிப்பு ஓய்வூதியத்திட்டங்களை பிரபல்யப்படுத்துவதன் மூலம் அதிகரிக்கப்பட வேண்டிய தேவை காணப்படுகின்றது.

சிறப்புக்குறிப்பு 5 (தொடர்ச்சி)

விரைந்து வயோதிப நிலையை எய்துவதிலிருந்து உருவாகும் பொருளாதாரத்தின் பல்வேறுபட்ட துறைகளின் பாதகமான தாக்கங்களுக்கு தீர்வு காணும் நோக்கில் அனைத்தையும் உள்ளடக்கிய தேசிய வயோதிபர் கொள்கையொன்றின் அபிவிருத்தியும் இன்னுமொரு தேவையாகத் தோன்றுகின்றது. தேசிய வயோதிப கொள்கையொன்றினை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான தகவல்களையும் தரவுகளையும் சேகரிப்பதற்காக ஆராய்ச்சி நடவடிக்கைகள் விரிவுபடுத்தப்படல் வேண்டும்.

இந்தப் பிரச்சனையினைத் தணிப்பதற்கான இன்னுமொரு வழி என்னவெனில் அவர்கள் உழைக்கும் காலத்தில் வயோதிப காப்புறுதித் திட்டங்கள் போன்ற நீண்டகால சேமிப்புத் திட்டங்களில் சேர்ந்து கொள்ளுவதாகும்.

அரச வரவு செலவுத் திட்டத்தில் சுமையினைக் குறைக்கும் வகையில் அரசாங்கத்தின் ஓய்வூதியக் கொள்கை சீரமைக்கப்படல் வேண்டும். இது பெருமளவு உதவி தேவைப்படுவோரின் பக்கம் தனது கவனத்தை செலுத்துவதற்கு அரசாங்கத்துக்கு இயலச் செய்யும். இது பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் வடிவில் கொண்டுவரப்படல் வேண்டும். ஆளொருவர் ஒன்றுக்கு மேற்பட்ட திட்டங்களுக்குப் பங்களிப்புச் செய்யும் பல்வகை சமூகப்பாதுகாப்பு திட்டங்களில் சேரும்படி மக்களை ஊக்குவிப்பதும் பயன்தரக் கூடியதாகும்.

வயோதிபர்கள் தமது வயோதிப காலத்தினை மகிழ்ச்சியாக கழிக்கும் வகையில் முதியோர் இல்லங்களை நடத்திச் செல்லுவதன் மூலம் சமூகப் பாதுகாப்பில் அதிகரித்த பங்கினை வகிக்குமாறு தனியார் துறையினரும் அரசுசார் பற்ற நிறுவனங்களும் ஊக்குவிக்கப்படல் வேண்டும்.

வயோதிப சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்களின் இறுதிக் குறிக்கோளாகக் காணப்பட வேண்டியது என்னவெனில் மரியாதையுடன் தமது வயோதிப காலத்தினை அனுபவிப்பதற்கான சந்தர்ப்பங்களை வழங்குகின்ற வேளையில் ஏனையோரில் அண்டியிருப்பதை ஆகக் குறைந்ததாக்குவதாகும்.

படையில் நுழையும் இளைஞர்களின் எண்ணிக்கை 2020 ஆம் ஆண்டளவில் உச்ச நிலையை எய்தி அதன்பின் வீழ்ச்சியடையத் தொடங்கும். இதன் விளைவாக அடுத்த நூற்றாண்டின் முதலாவது தசாப்தத்தில் தொழிலாளர் பற்றாக்குறை உருவாகக் கூடும். தொழிலாளர் சந்தையில் இந்த மாற்றமும் தற்போது தொழிலற்றுக் காணப்படுவோரை உற்பத்தித்திறன்மிக்க தொழில் வாய்ப்புக்களுக்கு ஈர்த்துக் கொள்ளவேண்டிய உடனடியான பிரச்சனையும் அடுத்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கான பொருளாதாரக் கொள்கைகளின் வடிவமைப்பின் போது பொருத்தமான முறையில் கருத்திற் கொள்ளப்படவேண்டிய விடயங்களாகும். தற்போது தொழில் வாய்ப்பற்றோருக்கு குறுகிய காலத்தில் உற்பத்தித் திறன்வாய்ந்த தொழில் வாய்ப்புக்களை வழங்குவதனை இயலச் செய்யும் பொருட்டு குறுகிய காலத்தில் குறிப்பாக தனியார்துறையில் முதலீடுகளை ஊக்குவிக்க வேண்டிய அவசரத் தேவை காணப்படுகிறது. தொழிலாளர் சந்தையை அதிகளவில் நெகிழ்ச்சியுடையதாக்கி தொழிற்படையினை உற்பத்தித்திறன்மிக்கதாக்கி கைத்தொழில்களின் தேவைகளுக்கு இலகுவில் ஏற்புடையதாக மாற்றுவதன் மூலம் தனியார் முதலீட்டை ஊக்குவிக்கலாகையால் தொழிலாளர் சந்தைக் கொள்கைகள் முதலீட்டு ஊக்குவிப்பினை முழுமைப்படுத்தக் கூடியனவாகும். அதி உயர் உற்பத்தித்திறன் மிக்க முதலீட்டின் மூலம் புதிய தொழில் வாய்ப்புக்கள் விரைந்து அதிகரிக்கப்படுமேயானால் முதிர்ச்சியடையும் குடித்தொகையின் பாகமொன்று அதாவது 60 வயது கட்டாய ஓய்வுக்குப்பின் ஓய்வைப் பெறும் ஆட்களை பொருளாதார நடவடிக்கைகளில் பயன்தரு வகையில் ஈடுபடுத்தப் கூடியதாக இருக்கும். தொழில் நுட்ப அதிகரிப்புடன் இசைந்து செல்லக் கூடிய வகையில் புதிய தேர்ச்சிகளை மேம்படுத்தும் வகையில் கல்வி மற்றும் பயிற்சி முறைகள் மீளமைக்கப்படல் வேண்டும்.

பால் விகிதம் 1946 இன் 113 இலிருந்து 1997 இல் 104 இற்கு உறுதியாக வீழ்ச்சியடைந்தது. 21ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலப்பகுதிக்கான எறிவுகள் 2021 ஆம் ஆண்டளவில் இந்த விகிதம் 99இற்கு மேலும் வீழ்ச்சியடையும் என வெளிப்படுத்துகின்றன. மொத்தக் குடித்தொகையில் பெண்களின் பங்கின் அதிகரிப்புக்கு பெண்களின்

அதி உயர் வாழ்வுக்காலமே காரணமாகும். 1960களில் ஆண்களுக்கு மிகச் சாதகமாக விளங்கிய பிறப்பின்போதான வாழ்வுக்காலம் 1990களில் பெண்களுக்குச் சாதகமாக நேர்மாற்றடைந்தது. 1991 இல் பெண்களின் வாழ்வுக்காலம் ஆண்களின் வாழ்வுக்காலமான 70.1 வருடங்களுக்கெதிராக 74.8 வருடங்களாக விளங்கியது.

**அட்டவணை 7.3**

தொழிற்படை பங்கேற்பு வீதம் (அ)

| ஆண்டு | மொத்தத் தொழிற் படை (000 ஆட்கள்) | தொழிற்படை பங்கேற்பு வீதம் (%) மொத்தம் | ஆண் | பெண் |
|---|---|---|---|---|
| 1992 | 5,808 | 48.2 | 65.2 | 31.0 |
| 1993 | 6,032 | 49.1 | 65.3 | 33.1 |
| 1994 | 6,078 | 48.7 | 65.4 | 32.0 |
| 1995 | 6,106 | 47.9 | 64.4 | 31.7 |
| 1996 | 6,227 | 48.5 | 66.1 | 30.7 |
| 1997 | 6,218 | 48.3 | 65.7 | 33.1 |

மூலம் : குடிமதிப்பு புள்ளி விபரத் திணைக்களம்

(அ) காலாண்டு தொழிற்படை அளவீடு 1996 வரையிலான ஆண்டுச் சராசரி மற்றும் 1997ஆம் ஆண்டுக்கான மூன்றாம்காலாண்டுத் தரவுகள்.(வடக்குக் கிழக்கு மாகாணங்கள் தவிர)

## 7.2 தொழிற்படை

தொகை மதிப்பு புள்ளி விபரவியல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொழிற்படை அளவீடு ஒன்றின்படி 1997 இன் மூன்றாம் காலாண்டுப் பகுதியின் இறுதியில் (வடக்குக் கிழக்கு மாகாணங்கள் நீங்கலாக) தொழிற்படை 6.2 மில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது பெரும்பாலும் 1996 இன் மூன்றாம் காலாண்டுப் பகுதியில் நிலவிய அதே மட்டமாகும். இதில் 89.6 சதவீதமானோர் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டிருந்த வேளையில் 10.4 சதவீதமானோர் தொழிலின்றிக் காணப்பட்டனர். தொழிற்படையின் பங்கேற்பு வீதம் (மொத்தக் குடித்தொகையில் தொழிற்படையின் சதவீதப்பங்கு) 48.3 சதவீதமென மதிப்பிடப் பட்டுள்ளது. பெண்களினதும் ஆண்களினதும் பங்கேற்பு வீதம் முறையே 65.7 சதவீதமாகவும், 33.1 சதவீதமாகவும் காணப்பட்டது. 25 - 34 வயதுப் பெண்கள் குழுவின் பங்கேற்பில் அதிகூடிய பங்கேற்பொன்று கடந்த சில தசாப்தங்களில் அவதானிக்கப்பட்டுள்ளது. பணிகள் துறையிலும் ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்களிலும் தொழில் வாய்ப்புக்களின் விரிவாக்கமும் குறிப்பிடத்தக்க இந்த அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்வதில் செல்வாக்குச் செலுத்திய முக்கிய கேள்விக் காரணிகளாகும். குடும்பத்தின் ஆகக் குறைந்த வருமான அதிகரிப்புக்கான தேவைப்பாடு, உயர் கல்வித் தகைமைகளுடனான பெண்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு மற்றும் சமூக மனப்பாங்கில் ஏற்பட்ட மாற்றம் என்பன வழங்கலில் செல்வாக்குச் செலுத்திய முக்கிய பங்களிப்புக் காரணிகளாகும்.

இலவசக் கல்வியின் கிடைக்கத்தக்க தன்மை, பொதுக் கல்விக்கான வாய்ப்புக்களின் விரிவாக்கம் மற்றும் பாடசாலைகளில் அதிகரித்த அனுமதி என்பனவற்றின் காரணமாக தொழிற்படையில் பெரும்பாலானோர்ஆரம்ப மற்றும் இரண்டாம் தரக் கல்வியினைப் பெற்றிருந்தனர்.

## 7.3 தொழில் நிலை

1997 இல் அதி உயர் பொருளாதார வளர்ச்சி வீதத்துடன் இவ்வாண்டில் பொருளாதாரம் 75,000 மேலதிக தொழில் வாய்ப்புக்களை உருவாககியது. தொழில் வாய்ப்பு உருவாக்கத்திற்கான பங்களிப்பு முக்கியமாக தனியார் துறையின் அதிகரித்த நடவடிக்கையிலிருந்தே பெறப்பட்டது. இதே போன்று முன்னைய ஆண்டைப் போலவே இவ்வாண்டிலும் முதலீட்டுச் சபை புதிய தொழில் வாய்ப்புக்களின் உருவாக்கத்தின் பாரிய பங்கொன்றுக்கு பங்களிப்புச் செய்தது. அரசதுறையின் அளவு சார்பு ரீதியில் சிறிதாகக் காணப்பட்டமையினால் 1996 ஆம் ஆண்டின் 14,690 உடன் ஒப்பிடுகையில் 1997 இல் தொழில் வாய்ப்புக்களின் உருவாக்கம் கிட்டத்தட்ட 9,873 ஆகக் காணப்பட்டது.

1990 காலப்பகுதியில் தொழில் வாய்ப்பின்மை வீதத்தில் படிப்படியாக மெதுமையடையும் தன்மை அவதானிக்கப்பட்டது. முறைசாராத்துறையின் நடவடிக்கைகளின் விரிவாக்கம், கணனி, மின்னியல் வெகுசனத் தொடர்புச் சாதனங்கள் மற்றும் நிதியியல் பணிகள் போன்ற துறைகளில் தொழில் வாய்ப்பு உருவாக்கம் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களுக்காக பெருமளவில் இடம்பெறல் என்பன தொழில் வாய்ப்பின்மையின் வீழ்ச்சிக்குப் பங்களிப்புச் செய்த முக்கிய காரணிகளாகத் தோன்றுகின்றன. எனினும் இளைஞர்களுக்கிடையில் தொழில் வாய்ப்பின்மை இன்னமும் உயர்வாகவே காணப்படுகின்றது. இலங்கையில் தொழில் வாய்ப்பின்மையின் இன்னுமொரு முக்கிய பண்பு யாதெனில் தொழில் வாய்ப்பற்றோரின் தொழிலுக்கான தேர்வாகும். 1997 இன் 3ஆம் காலாண்டில் தொழில் வேண்டி நிற்போரின் 0.6 சதவீதத்தினர் மட்டுமே வேளாண்மை சார்ந்த தொழில்களை விரும்பிய வேளையில் 33 சதவீதமா

### அட்டவணை 7.4

### தொழிற்படையும் தொழில் நிலையும்

| | ஆயிரம் ஆட்கள் | | | | | சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | 1993 | 1994 | 1995 | 1996 | 1997 | 1996 | 1997 |
| மொத்தக் குடித்தொகை | 17,619 | 17,865 | 18,114 | 18,315 | 18,552 | 1.1 | 1.3 |
| குடித்தொகை (10 வயதும் அதற்கு மேலும்) | 12,251 | 12,559 | 12,774 | 12,850 | 12,863 | 0.6 | வி. கி. |
| தொழிற்படை (அ) | 6,066 | 6,046 | 6,172 | 6,245 | 6,218 | 1.2 | வி. கி. |
| தொழிலிலுள்ளோர் (அ) | 5,227 | 5,315 | 5,433 | 5,535 | 5.571 | 2.0 | வி. கி. |
| அரசதுறை | 1,295 | 1,325 | 1,307 | 1,161 | 1,072 | -1.4 | 8.0 |
| அரசு | 676 | 700 | 738 | 752 | 762 | 5.4 | 1.3 |
| அரசுசார் துறை | 619 | 625 | 569 | 409 | 310 | -9.0 | -24.2 |
| தனியார் துறை | 3,931 | 3,990 | 4,126 | 4,374 | 4,499 | 6.0 | 3.0 |
| மு. ச. தொழில் முயற்சிகள் | 180 | 206 | 233 | 242 | 258 | 13.0 | 7.0 |
| ஏனையவை | 3,751 | 3,784 | 3,893 | 4,132 | 4241 | 6.1 | 2.6 |
| தொழிலற்றோர் (அ) | 839 | 731 | 739 | 721 | 647 | 1.1 | - |
| விஞ்ஞாபன விடயங்கள் | | | | | | | |
| தொழிற்படை பங்கேற்பு வீதம் (%) (அ) | 49.5 | 48.1 | 48.3 | 48.5 | 48.3 | - | |
| தொழிலற்றோர் வீதம் % (அ) | 13.8 | 12.1 | 12.0 | 11.1 | 10.4 | - | |

(அ) காலாண்டு தொழிற்படை அளவீடு, 1996 வரையிலான 4 ஆம் காலாண்டுத் தரவு மற்றும் 1997 இற்கான 3 ஆம் காலாண்டுத் தரவு

மூலங்கள் : குடிமதிப்புப் புள்ளி விபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

### அட்டவணை 7.5

### தொழிற்படையும் தொழில் நிலையும் (அ)
### (ஆண்டின் மூன்றாம் காலாண்டு)

ஆயிரம் ஆட்கள்

| விடயம் | 1993 | 1994 | 1995 | 1996 | 1997 |
|---|---|---|---|---|---|
| குடியிருப்பாளர் குடித்தொகை (10 வயதும் அதற்கு மேலும்) | 12.284 | 12.479 | 12,763 | 12.843 | 12,863 |
| தொழிற்படை | 6.032 | 6.142 | 6.115 | 6.238 | 6.218 |
| மொத்தத் தொழிலிலுள்ளோர் | 5.249 | 5.299 | 5.339 | 5.517 | 5.571 |
| வேளாண்மை, கால்நடை, மீன்பிடி | 2.293 | 1,833 | 1,967 | 2,078 | 1,971 |
| சுரங்கமகழ்தலும், கல்லுடைத்தலும் | 66 | 32 | 92 | 86 | 80 |
| தயாரிப்பு | 740 | 769 | 864 | 838 | 904 |
| மின்வலு, வாயு, நீர் | 23 | 25 | 12 | 28 | 21 |
| கட்டடவாக்கம் | 171 | 260 | 270 | 284 | 299 |
| வர்த்தகமும் உணவகங்களும் | 636 | 643 | 601 | 605 | 690 |
| போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், தொடர்பூட்டல் | 223 | 296 | 237 | 276 | 294 |
| காப்புறுதி, உண்மைச் சொத்து | 81 | 61 | 72 | 1,046 | 1,125 |
| தனியாள் பணிகள் | 776 | 1,080 | 952 | 975 | 960 |
| எனைய பணிகள் (குறிப்பிடப்படாதவை) | 238 | 229 | 272 | 242 | 238 |

(அ) வடக்குக் கிழக்கு மாகாணங்கள் தவிர

மூலம் : குடிமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்
காலாண்டு தொழிற்படை அளவீடு

னோர் அலுவலகங்களில் பொருளாதாரத்தின் தொழிலை நாடி நிற்கின்றனர். பொருளாதாரத்தின் சில துறைகளில் தொழிலாளர் பற்றாக்குறை காணப்பட்ட வேளையில் அதி உயர் தொழில் வாய்ப்பின்மையின் தொடர்ச்சியானது இலங்கையில் தொழிலாளர் சந்தையில் காணப்படும் சிறப்பான தொரு பண்பாகும். எனவே எம்முன்னால் உள்ள பாரிய அறைகூவல் என்னவெனில் பொருளாதாரத்தின் மாறுபடும் தேவைகளை குறிப்பாக தனியார் துறையின் தேவைகளைக் கருத்திற் கொண்டு வளர்ச்சியடையும் தொழிற்படையினருக்குப் பொருத்தமான முறையில் கல்வி முறையினை மறுசீரமைத்து தொழில்வாய்ப்பின்மையினைக் குறைப்பதாகும்.

மூன்றாம் தரக் கல்வியில் பெண்களின் பங்கேற்பின் படிப்படியான அதிகரிப்பு தொழில் சார்ந்த பயிற்சி மற்றும் பெண்களின் சார்பாக

பால் விகிதத்தின் அதிகரிப்பு என்பனவற்றின் காரணமாக தொழிற்படையில் பெண்களின் பங்கேற்பு மேலும் அதிகரிக்கக் கூடும்.

1997 இல் அரசதுறையின் தொழில்நிலை 1.07 மில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளதோடு 1996 இனைவிட 8 சதவீத வீழ்ச்சியையும் குறித்துக் காட்டியது. அரசுசார்ந்த துறையின் தொழில் நிலையின் 24 சதவீத வீழ்ச்சியே இதற்கான தனியான காரணமாகும். அரசதுறை தொழில் முயற்சி சீர்திருத்த கொள்கைகளுடன் இணைந்து 1997 இல் நீண்டகால குத்தகை ஒப்பந்தங்களின் கீழ் தனியார்துறைக்கு 22 பெருந்தோட்டங்கள் மாற்றல் செய்யப்பட்டமையானது அரசுசார்ந்த துறையின் தொழில் நிலையில் வீழ்ச்சிக்கு இட்டுச் சென்றது. எனினும் கடந்த காலங்களில் அவதானிக் கப்பட்ட போக்கினைத் தொடர்ந்து மத்திய அரசு, மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அதிகார சபை என்பனவற்றை உள்ளடக்கிய அரசதுறையின் தொழில்நிலை தொடர்ந்தும் அதிகரித்து 1997 இல் 1 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. அரசதுறை தொழில் நிலையின் அதிகரிப்பானது எழுது வினைஞர் மற்றும் சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் மற்றும் நிருவாக முகாமைத்துவ தொழிலாளர்கள் வகையில் பெருமளவு பிரதிபலிக்கப்பட்டது. எனினும், தொழில் சார்ந்தோரின் தொழில் வகைப்படி தொழில்நுட்ப மற்றும் அத்துடன் தொடர்பான தொழிலாளர்கள் முன்னைய ஆண்டிலும் பார்க்க 2 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்தமைக்கு ஓய்வு பெற்றதின் விளைவாக ஆசிரியர் துறை வகையில் ஏற்பட்ட 4 சதவீத வீழ்ச்சியே முக்கியமான காரணமாகும்.

1997 இன் 3ஆம் காலாண்டில் பணிகள் தயாரிப்பு மற்றும் கட்டுமானத்துறைகளில் ஈடுபடுத்தப்பட்ட தொழிலாளர்களின் சார்புரீதியான பங்கு தொடர்ந்தும் அதிகரித்த வேளையில் வேளாண்மைத்துறை மேலும் வீழ்ச்சியைப் பதிவு செய்தது. தொழிலாளர்களை ஈடுபடுத்துவதில் வேளாண்மைத்துறை தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்திய போதிலும் அதனது பங்கு 1996 இன் 38 சதவீதத்திலிருந்து 1997 இல் 35 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இதே வேளையில் தயாரிப்புத் துறையில் தொழிலில் உள்ள ஊழியர்களின் பாகமானது 15 சதவீதத்திலிருந்து 16 சதவீதத்திற்கு அதிகரித்தது. இந்தத் துறையில் கடந்த சில ஆண்டுகளாக அவதானிக்கப்பட்ட குறிப்பிடத்தக்க பண்பு யாதெனில் ஏற்றுமதி சார்ந்த திறந்த சந்தை பொருளாதாரக் கொள்கைகளின் காரணமாக கிராமியத்துறையிலும் நகர்ப்புறத்துறையிலும் பெண்களின் தொழில் நிலையில் ஏற்பட்ட அதிகரிப்பாகும்.

பணிகள் துறையில் வங்கித் தொழில், நிதியியல் மற்றும் உண்மைச் சொத்துக்கள், போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல் தொடர்பூட்டல் வர்த்தகம் மற்றும் உணவக துணைத்துறைகளின் தொழில் வாய்ப்புக்கள் விரிவடைந்தன.

சமுர்த்தி போன்ற வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டங்களினூடாக சுயதொழில் வாய்ப்புக்களின் உருவாக்கம் 1997 இலும் தொடர்ந்தது. கடன் வசதிகளின் வழங்கலும் தொழிற்பயிற்சியின் ஊடாக தேர்ச்சிகள் தரமுயர்த்தப் பட்டமையும் குறிப்பாக கிராமிய பிரதேசங்களில் வருவாய் உருவாக்க நடவடிக்கைகளின் உருவாக்கத்துக்கு உதவின. மொத்த மற்றும் சில்லறை விற்பனை, தனிப்பட்ட மற்றும் ஏனைய பணிகளில் அதிகூடிய செறிவு காணப்பட்டது.

## 7.4 வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பு

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின்படி 1997 இல் பதியப்பட்ட மூலங்களின் ஊடாக கிட்டத்தட்ட 150,000 ஆட்கள் வெளிநாட்டில் தொழில்புரிவதற்காக நாட்டை விட்டுச் சென்றுள்ளனர். இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்யாமலே நண்பர்கள் மற்றும் உறவினர்களின் ஊடாக இன்னமும் பலர் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ளுகின்றமையின் காரணமாக உண்மையான எண்ணிக்கை இதைவிட உயர்வானதாக இருக்கும். அத்துடன் இணைந்து வெளிநாட்டில் தொழில் புரிவதற்காகச் செல்லும் ஆட்களைப் பதிவு செய்யும் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தளர்த்தலானது பதிவு செய்யப் பட்ட மூலங்களின் ஊடாக வெளிநாடுகளில் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ளுவதில் குறைப் பொன்றுக்கு இட்டுச் சென்றது. எனவே வெளிநாட்டில் தொழில் ஒப்பந்தங்களை மேற்கொண்ட ஆட்களின் எண்ணிக்கை 1997 இல் அறிவிக்கப்பட்ட எண்ணிக் கையைவிட அதிகமானதாகக் காணப்படலாம்.

வெளிநாட்டில் தொழிலாளர்களுக்கான கேள்வியில் பெரும்பாலானவை தேர்ச்சியற்ற தொழிலாளர்களுக்கானதாக குறிப்பாக, வீட்டுப் பணிப் பெண்களுக்கானதாக இருந்ததோடு இவர்கள் வெளிநாட்டுப் பெண் தொழிலாளர்களின் 86 சதவீதத்திற்கு வகை கூறினர். நீண்டகாலமாக இந்த நாடுகளில் சம்பளங்களும் கூலிகளும் முடங்கிக் காணப்பட்டபோதிலும் மொத்த வெளிச் செல்லல் களில் அதி கூடிய பங்கான கிட்டத்தட்ட 89 சதவீத

த்திற்கு மத்திய கிழக்கு நாடுகள் வகை கூறின.

இவர்கள் நாட்டுக்கான வெளிநாட்டுச் சம்பாத்திய உழைப்பின் முக்கிய மூலமொன்றாக மாறியுள்ளமையினால் இந்தத் தொழிலாளர்களினதும் அவர்களது குடும்பங்களினதும் நலன்புரி வசதிகளை அரசாங்கம் தொடர்ந்து மேம்படுத்தியும் விரிவுபடுத்தியும் வருகின்றது.

**சிறப்புக் குறிப்பு 6**

## நுகர்வோர் நிதி மற்றும் சமூகப் பொருளாதார அளவீடு 1996/97

குடும்ப அலகுகளின் சராசரி வருமானங்கள், செலவாகும் முறைகள், தொழில்நிலை, தொழில் வாய்ப்பின்மை, வீடமைப்பு நிலைமைகள், மற்றும் சேமிப்புக்கள் என்பனவற்றை அறிந்து கொள்வதற்கான முதன்மைக் குறிக்கோளுடன் 1953இல் இலங்கை மத்திய வங்கி அதனது முதலாவது நுகர்வோர் நிதி அளவீட்டை நடாத்தியது. முதலாவது அளவீடானது இந்த விடயம் தொடர்பான முன்னோடி ஆய்வாக அமைந்ததோடு 1963, 1973, 1978/79, 1981/82, 1986/87 மற்றும் 1996/97இல் நடாத்தப்பட்ட பின்னைய அளவீட்டுத் தொடர்களுக்கான அடிப்படையினையும் வழங்கியது. இந்த அளவீடுகளின்போது மாதிரியின் அளவும் சமூகப் பொருளாதார மாறிலிகளின் உள்ளடக்கமும் விரிவாக்கப்பட்டவேளையில் முக்கிய மாறிலிகள் தொடர்பான ஒப்பீட்டுத் தரவுகள் பேணப்பட்டன. இதன் மூலம் நான்கு தசாப்தங்களுக்கான அனைத்தையும் உள்ளடக்கிய தரவுகளை அவற்றின் பாவனையாளர்கள் பெற்றுக் கொள்ள இயலுமானதாக இருந்தது. நுகர்வோர் நிதி அளவீட்டுத் தொடரின் தரவுகள் ஆராய்ச்சியாளர்கள், திட்டமிடல் அலுவலர்கள், மாணவர்கள், சமூக சேவையாளர்கள், மற்றும் பொது மக்களினால் பரந்தளவில் பயன்படுத்தப் படுகின்றன. கொள்கைத் திட்டமிடலில் தனியார் மற்றும் பொது நிறுவனங்களுக்கு இந்த அளவீட்டுத் தொடர்கள் தகவலுக்கான பாரிய மூலமாக விளங்குகின்றன.

மத்திய வங்கியின் புள்ளிவிபரத் திணைக்களம் 1996 ஒத்தோபரிலிருந்து 1997 திசெம்பர் வரையான காலப்பகுதியில் 1996/97 நுகர்வோர் நிதி பொருளாதார அளவீட்டின் கள வேலைகளை நான்கு சுற்றுக்களில் மேற்கொண்டது. இதற்கான தகவல்கள் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் சில பகுதிகள் தவிர்ந்த நாடளாவிய ரீதியில் 8880 குடும்ப அலகுகளின் மாதிரிகளில் இருந்து சேகரிக்கப்பட்டன. இந்த அளவீடுகளின் முக்கிய கண்டுபிடிப்புக்களாவன முதிர்ச்சியடையும் குடித்தொகை, சுகாதாரம், கல்விப் பெறுபேறுகள் மற்றும் எழுத்தறிவு என்பனவற்றில் மேலும் முன்னேற்றம், தொழில்வாய்ப்பின்மை வீதத்தில் கணிசமான குறைப்பு, தொழிற்படைப் பங்கேற்பில் அதிகரிப்பு, வருமானச் சமப்படுத்தலுக்கான நகர்வு, குடும்ப அலகுகளுக்கான வசதிகள் மற்றும் உபகரணங்களைப் பெருமளவில் பெற்றுக்கொள்ளக் கூடிய தன்மை என்பனவாகும்.

வயது அடிப்படையில் குடித்தொகைப் பரம்பல் கடந்த மூன்று தசாப்தங்களிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்களுக்கு உட்பட்டுள்ளது. முக்கியமான மாற்றமொன்று என்னவெனில் இளம் வயதுக் குழுக்களின் பங்கு வீழ்ச்சியடைந்தமையும் முதிர்ச்சியடைந்த வயதுக் குழுவினரின் பங்கு அதிகரித்தமையுமாகும். 14 வயதுக்குக் கீழானவரின் பங்கு 1963இல் 40.5 சதவீதத்திற்கு வகை கூறியதுடன் 1996/97 இல் 25.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இதே வேளையில் 55 வயதுக்கு மேலான குடித்தொகையின் பங்கு 1963இன் 7.2 சதவீதத்திலிருந்து 1996/97இல் 13.3 சதவீதத்திற்கு அதிகரித்து குடித்தொகையின் முதிர்ச்சியடையும் தன்மையினைக் குறித்துக்காட்டியது. குடித்தொகையில் இளம் வயதுக் குழுவினரின் பங்கின் வீழ்ச்சியினால் பிரதிபலித்த குடிப்பரம்பல் மாற்றத்துக்கு கருவுறல் வீதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியே முக்கிய காரணமாகக் குறிப்பிடப்படுகின்றது. மறுபுறத்தில் இறப்பு வீதத்தில் காணப்பட்ட வீழ்ச்சியானது குடித்தொகையின் வாழ்வுக்கால நீடிப்புக்குப் பங்களிப்புச் செய்ததோடு முதிர்ச்சியடைந்த குடித்தொகையின் பங்கினை அதிகரிக்கச் செய்தது.இந்தப் போக்கானது பலதரப்பட்ட சமூகப் பொருளாதார உட்படுத்தல்களைக் கொண்டிருக்கும். இன்னுமொரு பக்கத்தில் குடித்தொகை யின் பள்ளி செல்லும் வயதினரின் பங்கில் ஏற்பட்ட வீழ்ச்சியானது கல்வி முறையின் மீது காணப்படும் அழுத்தத்தினை இலகுபடுத்துவதுடன் கல்வித்தரத்தின் மேம்பாட்டிற்கு இடமளிக்கக் கூடியதாக இருக்கும். மறுபக்கத்தில் வயது முதிர்ந்த குடித் தொகையின் பங்கின்

சிறப்புக் குறிப்பு 6 (தொடர்ச்சி)

அதிகரிப்பானது எதிர்காலத்தில் முதியவர்களைக் கவனிப்பதற்கான நலக் கவனிப்பு மற்றும் சமூகப்பாதுகாப்பு முறைகள் என்பன வற்றில் விரிவாக்கத்தினைத் தேவைப்படுத்தும்.

கல்வியைப் பொறுத்தவரையில் 1953இன் 12சதவீதத்துடன் ஒப்பிடுகையில் குடித் தொகையின் 56 சதவீதத்தினர் ஆரம்பக் கல்வி மட்டத்தினைத் தாண்டியுள்ளதை 1996/ 97 அளவீடு வெளிக் காட்டியது. 1996/97 இல் 92 சதவீதத்தினை எய்தியிருந்த முதியோர் எழுத்தறிவு வீதம் தென்கிழக்காசிய நாடுகளில் அவதானிக்கப்பட்ட அதிஉயர் மட்டத்தில் காணப்பட்ட வேளையில் கடந்த காலங்களில் நிலவிய கல்விப் பெறுபேறுகளின் பால் ரீதியான சமமின்மை படிப்படியாகக் குறைக்கப் பட்டுள்ளது.

பெண்களின் பங்கேற்பில் காணப்பட்ட அதிகரிப்பின் முதன்மைக் காரணத்தினால் தொழிற் படைப் பங்கேற்பு வீதங்கள் படிப்படி யான அதிகரிப்பினைக் காட்டியுள்ளன. பெண்களின் பங்கேற்பில் காணப்பட்ட அதிகரிப்பானது பெண் களின் உயர் கல்வி பெறுபேறுகளையும் உள்ளடக்கி, உள்நாட்டுப் பொருளாதார விரிவாக்கத்தினால் உந்தப்பட்ட தொழில் நாட்டம் மற்றும் வெளி நாட்டில் வேலை வாய்ப்பை நாடும் பெண்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு என்பனவற்றின் விளைவாகும்.

1996/97இன் அளவீடானது தொழில் வாய்ப் பின்மை வீதத்தில் கணிசமான குறைப்பொன்றி னையும் வெளிப்படுத்தியது. பொருளாதாரத்தில் மந்தமான வளர்ச்சியின் காரணமாக 1973 இல் தொழில் வாய்ப்பின்மையானது தொழிற்படை யின் உயர்ந்த வீதமொன்றான 24 சதவீதத்தில் காணப்பட்டது. 1977 இற்குப் பிற்பட்ட காலப் பகுதியில் பொருளாதாரம் விரைவாக விரிவடைந்ததன் காரணமாக 1981/ 82 காலப்பகுதியில் தொழில் வாயப்பின்மை வீதத்தினை 11.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடையச் செய்தது. எனினும் 1986/ 87 காலப்பகுதியில் மகாவலி நிகழ்ச்சித் திட்டத்தின் பாரிய முதன்மை வேலைகளும் ஏனைய உட்கட்டமைப்பு அபிவிரு த்திச் செயற்றிட்டங்களும் முற்றுப் பெற்றமையின் காரணமாக 1986/ 87 நுகர்வோர் நிதி சமூகப் பொருளாதார அளவீட்டுத் தரவுகளில் காட்டப் பட்டவாறு தொழில் வாய்ப்பின்மை வீதம் அதிகரித்தது. அதன் பின்னர் 1990களில் பொருளாதார நடவடிக்கைகள் சூடுபிடிக்கத்தொடங்கி யமையின் காரணமாக தொழில் வாய்ப்பின்மை இலகுபடுத்தப் படுவதற்கான அறிகுறிகள் காணப் பட்டன. மிக அண்மிய அளவீட்டின்படி தொழில் வாய்ப்பின்மை வீதமானது 11.5 சதவீதத்திற்குக் குறைந்துள்ளதோடு இது நுகர்வோர் நிதி சமூகப் பொருளாதார அளவீட்டுத் தொடரில் பதியப் பட்ட ஆகக் குறைந்த வீதமுமாகும். ஏற்றுமதியி னால் வழிநடத்தப்பட்ட வளர்ச்சியின் காரண மாக பொருளாதாரத்தின் விரைந்த விரிவாக் கமும் தனியார் துறையின் இயக்க விசையும் தொழிலாளர் ஈர்ப்பின் தீவிரப் படுத்தலுக்கு இட்டுச்சென்றுள்ளன. கிராமிய, நகர்ப்புற தோட்டத்துறை ஆகிய மூன்று துறைகளிலும் தொழில் வாய்ப்பின்மையில் குறைப்பொன்று காணப்படுகின்றது.

நுகர்வோர் நிதி சமூகப் பொருளாதார அளவீட்டு தரவுகளினால் வெளிப்படுத்தப் பட்டவாறு வருமானப் பகிர்ந்தளிப்பு 1953 இலிருந்து 1963 மற்றும் 1973 இல் படிப்படியாக பாரிய சமப்படுத்தலுக்கு நகர்ந்துள்ளது. சமப்பாட்டினைக் கருத்திற் கொள்ளாது விரைந்த பொருளாதார அபிவிருத்திக்கான கொள்கை வலியுறுத்தலின் காரணமாக 1978/ 79இல் இந்தப் போக்கு நேர் மாற்றமடைந்ததது. 1981/ 82, 1986/87 அளவீடுகளில் வருமானச் சமமின்மைகள் மேலும் தெளிவாகக் காணப் பட்டன. 1996/97இன் அளவீடு மோசமடைந்த வருமானச் சமமின்மைப் போக்கின் மீண்டு மொரு நேர்மாற்றமொன்றினைக் குறித்துக் காட்டுகின்றது. இது சார்புரீதியில் விரைந்த பொருளாதார அபிவிருத்தியின் ஊடான பரந்தளவு தொழில்வாய்ப்பு உருவாக்கம் அரசின் நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்கள் சிறப்பாக இலக்கிடப்பட்டமை, குறைந்த வருமானக் குழுக்களுக்கு தாராளமயமாக்கல் வழிமுறை களின் நன்மைகள் சென்றடைந்தமை என்பனவற்றின் விளைவாகும். வெளிநாட்டில் தொழில் புரிவோரினால் தமது குடும்ப உறுப்பி னருக்கான வெளிநாட்டுப் பண அனுப்பல்களில் ஏற்பட்ட அதிகரிப்பும் வறியவர்களின் வருமான மட்டத்தினை உயர்த்துவதற்கு உதவியதோடு வருமானத்தின் மிகச் சமமான பங்களிப் பொன்றுக்கும் இட்டுச் சென்றன.

இத்துடன் தரப்பட்டுள்ள அட்டவணை யானது 1953 இலிருந்து நடாத்தப்பட்ட நுகர்வோர் நிதி சமூகப் பொருளாதார அளவீடு

களின் சமுகப் பொருளாதாரக் குறிகாட்டிகள் சிலவற்றின் போக்குகளைத் தொகுத்துத் தருகின்றது. முழுமையாகப் பார்க்கையில் எழுத்தறிவு, கல்விப் பெறுபேறுகள், தொழிற்படை மற்றும், தொழில் உருவாக்கம், வருமானப் பகிர்ந்தளிப்பு, கிடைக்கத்தக்க தன்மை என்பன வற்றினால் மேல் நோக்கிய போக்கொன்றினை அனைத்துக் குறிகாட்டிகளும் காட்டுகின்றன.

## அளவீட்டுத் தொடர்களிலிருந்தான முதன்மைப் பொருளாதாரக் குறிகாட்டிகள் (1953 -1996/97)

| குறிகாட்டிகள் | 1953 | 1963 | 1973 | 1978/79 | 1981/82 | 1986/87 | 1996/97* |
|---|---|---|---|---|---|---|---|
| **1. குடித்தொகை** | | | | | | | |
| 1.1 வயதுக்குழுக்களின்படி குடிப்பரம்பல்(ஆண்டுகளில்)% | | | | | | | |
| 0 - 13 | - | 40.5 | 38.4 | 34.2 | 34.0 | 30.8 | 25.9 |
| 14 - 18 | - | 11.5 | 11.5 | 12.3 | 11.3 | 11.7 | 11.3 |
| 19 - 25 | - | 10.9 | 13.1 | 13.7 | 13.5 | 12.5 | 11.3 |
| 26 - 35 | - | 12.4 | 12.3 | 13.7 | 14.4 | 14.3 | 14.6 |
| 36 - 45 | - | 10.1 | 9.9 | 9.6 | 9.9 | 11.2 | 13.2 |
| 46 - 55 | - | 7.3 | 6.4 | 7.6 | 8.0 | 8.4 | 10.4 |
| 55 இற்கு மேல் | - | 7.2 | 8.4 | 8.9 | 8.9 | 11.1 | 13.3 |
| 1.2 பால் ரீதியாக குடித்தொகை (%) | | | | | | | |
| ஆண் | 51.7 | 50.7 | 50.1 | 48.9 | 49.0 | 48.5 | 48.2 |
| பெண் | 48.3 | 49.3 | 49.9 | 51.1 | 51.0 | 51.5 | 51.8 |
| **2. குடித்தொகையின் எழுத்தறிவு மற்றும் கல்விப்பெறுபேறு** | | | | | | | |
| 2.1 எழுத்தறிவு வீதம் (%) | - | 82.2 | 80.8 | 86.2 | 85.4 | 88.6 | 92.1 |
| 2.2 கல்விப் பெறுபேறுகள் (%) | | | | | | | |
| பள்ளி செல்லாத | 41.6 | 36.6 | 32.2 | 24.4 | 25.0 | 11.8 | 8.3 |
| ஆரம்ப | 46.8 | 39.3 | 37.9 | 38.9 | 37.9 | 41.1 | 35.7 |
| இரண்டாந்தர | 9.8 | 19.6 | 23.9 | 26.4 | 25.8 | 32.1 | 41.1 |
| மூன்றாம்தர | 1.8 | 4.5 | 6.0 | 10.3 | 11.3 | 15.0 | 14.9 |
| **3. தொழிற்படை தொழில்நிலை தொழில் வாய்ப்பின்மை** | | | | | | | |
| 3.1 பொருளாதார செயற்றிறன் வாய்ந்த குடித்தொகை (%) | | | | | | | |
| அனைத்துத்துறைகளும் | 40.0 | 31.7 | 33.9 | 38.0 | 34.3 | 38.1 | 40.2 |
| ஆண் | 56.0 | - | 48.0 | 50.1 | 49.7 | 51.7 | 53.4 |
| பெண் | 22.9 | - | 19.8 | 26.0 | 19.4 | 25.4 | 28.0 |
| **3.2 தொழில்நிலைப் பரம்பல் (%)** | | | | | | | |
| **முதன்மை** | - | 53.2 | 54.8 | 49.6 | 52.8 | 49.6 | 38.6 |
| வேளாண்மை, காடாக்கல், மீன்பிடி | - | 53.0 | 54.5 | 48.3 | 51.2 | 47.7 | 37.1 |
| சுரங்கமகழ்தலும் கலலுடைத்தலும் | - | 0.2 | 0.3 | 1.3 | 1.6 | 1.9 | 1.5 |
| **இரண்டாந்தர** | - | 9.2 | 11.1 | 19.1 | 17.6 | 19.1 | 23.8 |
| தயாரிப்பு | - | 7.3 | 9.3 | 13.8 | 12.4 | 13.4 | 17.3 |
| கட்டுமானம் | - | 1.9 | 1.8 | 5.3 | 5.2 | 5.7 | 6.5 |
| **மூன்றாம்தர** | - | 37.6 | 34.1 | 31.3 | 29.6 | 31.3 | 37.6 |
| மொத்த சில்லறை விற்பனை உணவகங்கள் | - | 7.9 | 7.0 | 9.7 | 10.7 | 11.9 | 13.5 |
| பொதுநிருவாகம், பாதுகாப்பு, ஏனைய தனிப்பட்ட பணிகள் | - | 18.5 | 26.8 | 20.8 | 18.6 | 18.6 | 22.5 |
| ஏனைய | - | 11.2 | 0.3 | 0.8 | 0.3 | 0.8 | 1.6 |
| **3.3 தொழிற்படையின் % மாக தொழில் வாய்ப்பற்றோர்** | | | | | | | |
| அனைத்துத் துறைகளும் | 16.6 | 14.6 | 24.0 | 14.7 | 11.7 | 15.5 | 11.5 |
| ஆண் | 15.3 | - | 18.9 | 9.2 | 7.8 | 11.3 | 6.9 |
| பெண் | 20.0 | - | 36.4 | 24.9 | 21.3 | 23.6 | 19.7 |
| **4. வருமானப் பகிர்ந்தளிப்பு** | | | | | | | |
| 4.1 செலவிடும் அலகின் வருமானத்தின் சதவீதப் பங்கு | | | | | | | |
| ஆகக்குறைந்த 20 சதவீதம் | 5.2 | 5.4 | 7.2 | 6.3 | 5.7 | 5.1 | 5.5 |
| அதி கூடிய 20 சதவீதம் | 53.8 | 52.3 | 42.9 | 48.9 | 51.8 | 52.3 | 50.2 |
| அதி கூடிய 10 சதவீதம் | 40.6 | 36.8 | 23.0 | 34.6 | 37.3 | 37.4 | 34.8 |
| 4.2 ஜினி விகிதம் (செலவிடும் அலகுகள்) | 0.46 | 0.45 | 0.35 | 0.43 | 0.45 | 0.46 | 0.43 |
| **5. வசதிகளையும் உபகரணங்களையும் கொண்ட குடும்ப அலகுகளின் சதவீதம்** | | | | | | | |
| 5.1 மின்சாரமும் வெளிச்சமும் | 4.1 | 7.0 | 8.0 | 13.1 | 15.8 | 26.5 | 54.8 |
| 5.2 குழாய் குடிநீர் | 11.3 | 5.0 | 21.0 | 21.8 | 18.4 | 22.6 | 30.6 |
| 5.3 வானொலி | - | 20.0 | 25.4 | 49.9 | 60.7 | 67.1 | 72.3 |
| 5.4 தையல் மெசின் | - | 22.0 | 26.2 | 31.3 | 30.7 | 37.2 | 41.7 |
| 5.5 குளிர்சாதனப் பெட்டி | 0.9 | 1.0 | 1.3 | 2.3 | 2.9 | 8.1 | 17.4 |
| 5.6 தொலைபேசி | - | 0.8 | 0.3 | 0.7 | 0.9 | 1.4 | 3.7 |

மூலம்: இலங்கை மத்திய வங்கியின் நுகர்வோர் நிதி சமுகப் பொருளாதார அளவீடு

* அளவீட்டின் முதல் இரண்டு சுற்றுக்களின் அடிப்படையில்.